ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. நிதிநிலை, repaying capacity வருகிறபோது, இது பற்றி பரிசீலினை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 92, திரு. ஆர். டி. அரங்கநாதன்; திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**92-**

**வீட்டு உரிமையாளர் நகராட்சி வீட்டுவரி கட்டும் முறையை மாற்றியமைத்தல்.**

** 9983–**திரு. ஆர். டி. அரங்கநாதன்:***

**திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

தற்போது நடைமுறையில் உள்ள நகராட்சி வீட்டுவரி கட்டும் முறையில் வங்கி மூலம் வீட்டு உரிமையாளர்கள் பணம் கட்டும் முறையை மாற்றி முன்போல் வரித்தண்டலர் மூலம் வசூல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது, வரி செலுத்துவோர் வங்கி மூலம் வரித்தொகையை செலுத்த விரும்பினால் கேட்பு அறிக்கையில் குறிப்பட்டுள்ள தொகையை வங்கியில் செலான் மூலம் செலுத்தலாம் எனவும், வரி செலுத்துபவர் வரித் தொகையை வருவாய் உதவியாளரிடம் அளிக்க விரும்பினால் வருவாய் உதவியாளர் அதனைப் பெற்றுக் கொண்டு அத்தொகை முழுவதையும் அன்று மாலை 5.00 மணிக்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்திவிட வேண்டும் என்றும் அரசு கடிதம் (நிலை) எண். 219, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26-8-92-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. ஆர். டி. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே இன்றைக்கு

1993 மார்ச் 16]

மக்களின் நலன் கருதி, வரித்தண்டலர் மூலம் வசூல் செய்யும் அந்தத் திட்டத்திற்கு-அமைச்சர் சொல்லியிருக்கிற அந்தத் திட்டத்திற்கு--நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் வரித்தண்டலர்களை அந்தந்தப் பகுதியிலே, நகராட்சியிலே நீண்ட நாட்கள் விட்டு வைப்பதால், அப்பகுதியில் அவர்கள் வசூலிக்கும் நிதியை கணக்கில் கொண்டுவராமல் பொது மக்களை சரி செய்து கொண்டு, இன்றைக்கு அந்தப் பகுதியிலே செல்வாக்கு மிக்கவர்களாக இருந்து வருகிறார்கள். அந்த வரித்தண்டலர்களை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்தப் பகுதியிலிருந்து கட்டாய மாற்றம் செய்யவும், அந்தப் பணி சிறப்பாக அமைவதற்கும் அரசுமூலம் நடவடிக்கை எடுக்க அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நகராட்சி நிருவாகத்தின் மூலமாக 80 சதவீதம் வரிகளை நாங்கள் வசூலித்து இருக்கிறோம். குறிப்பிட்டு எந்தப் பகுதியிலே இது போன்ற நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டால் அவர்களைப் பற்றி நடவடிக்கை எடுத்து விசாரிப்பதற்கு முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இந்த கேள்வி கேட்கும்போது வங்கி மூலமாகத்தான் வசூல் செய்யவேண்டுமென்று விதி இருந்தது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு வந்த பிறகு இப்பொழுது வரித்தண்டலர்கள் வசூலிக்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். இருந்தாலும் சில நகராட்சிகளிலே வரித்தண்டலர்கள் இல்லையென்ற நிலைமையிருக்கிறது. வரித்தண்டலர்கள் ஒன்று இரண்டு பேர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களிடம் பணம் கட்ட வேண்டுமென்று சொன்னால், எங்களால் வாங்க இயலாது, பல வேலைகள் இருக்கின்றன, வங்கிகளிலே கட்டுங்கள் என்று சொல்கிறார்கள். வங்கிகளில் சென்று கட்டுவதற்கு சிரமங்கள், இடர்பாடுகள் இருப்பதால் ஏழை எளியவர்கள் வேலையை விட்டு விட்டு கட்ட முடியாததால், அந்த நகராட்சி நிதிநிலைமைக்கு மிகவும் கஷ்டப்படுகிறது. பல நகராட்சிகள் நிதிநிலைமையில் இன்று மிகவும் சிக்கலில் இருப்பது அமைச்சருக்குத் தெரியும். ஆகவே, போதுமான வரித்தண்டலர்களைப் போட்டு

நகராட்சிகளில் வசூல் செய்ய வேண்டுமென்று பல நகராட்சியர்கள் சொல்கிறார்கள். ஆகவே நகராட்சியர்களுடைய விருப்பத்திற்கிணங்க வரித்தண்டலர்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் எந்த நகராட்சியை கருத்திலே கொண்டு சொல்கிறார் என்று தெரிந்தால் அந்த நகராட்சியிலே இது பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 93, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

**93-**

**மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்குக் கிடைக்கும் சர்க்கரையின் அளவை அதிகரித்தல்**

**12502*–திரு. **ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழகத்திற்கு மாதந்தோறும் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் சர்க்கரையின் அளவு எவ்வளவு?

(ஆ) இதை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) (ஆ) மற்றும் (இ): தமிழகத்திற்கு மாதந்தோறும் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் லெவி சர்க்கரையின் அளவு 23,674 டன். அதுபோக அக்டோபர் நவம்பர் மாதங்களில் பண்டிகை ஒதுக்கீடாக 6800 மெட்ரிக் டன் நமக்குக் கிடைக்கிறது. இந்த அளவை உயர்த்த வேண்டுமென்று, சுமார் 31,000 மெட்ரிக் டன்னாக உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம்.

முற்பகல் 10.45

**திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு வழங்கும் சர்க்கரையின் அளவு மாநிலத்திற்கு மாநிலம்